Regd. M. No. 4565

# தமிழ் மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு

(TAMIL SIDDHA MEDICAL MAGAZINE)

மலர் 5 | ஜனவரி 1945 | இதழ் 1.

ஆசிரியர்:

தமிழ்ப் பண்டிதரும், மருத்துவ பண்டிதருமான

மாங்காடு. வடிவேலு முதலியார்.

உரிமையாளர்:

காரியக்கமிட்டியார் : சித்த மாணவர் கழகம்.

கவர்ன்மெண்ட் இந்திய மருத்துவ பாடசாலை

கீழ்ப்பாக்கம், மதராஸ்.

Printed by P Govindaraja Pillay at the Rudisill Press,
No 7, Nallanna Mudaly Street, Royapettah
and Published by C. M. Raja Jegatheesan,
at Govt. School of Indian Medicine, "Hyde Park"
Poonamallee High Road, Kilpauk, Madras.

# தி நியோ ரெமடீஸ் மானுபேக்சரிங் கம்பெனி

ராமச்சந்திரபுரம், புதுக்கோட்டை ஸ்டேட்,

—:: தென் இந்தியா. ::—

## NEO-GRIPE

நியோ - கிரைப் குழந்தைகள் வன்மையுடனும் நோய் அணுகாமலும் இருப்பதற்கு இது ஒரு முக்கிய ஔஷதமாகும். குழந்தைகளுக்கு எற்படும் குடல் சம்பந்தமான வயிற்று வலி, புளிப்பு வாந்தி, அசிரணம், வயறு உப்பிசம் போன்ற வியாதிகளுக்கு இது கை கண்ட மருந்தாம். குழந்தைகள் இருக்கும் ஒவ்வொரு வீட்டிலும் இது இருக்கவேண்டியது மிகவும் அவசியம். குழந்தைகளுக்கென பக்குவமான முறையில் உயர்தர மருந்துகளினால் செய்யப்பட்டது.

## NEO-PHLOGESTINE

நியோ - பிளாஜிஸ்டின் இது நிமோனியா முதலிய சுவாசாசய ரோகங்கட்கும், கட்டி, பிளவை, சூலை முதலிய வீக்கங்கட்கும் மேல் பூச்சாக பூச விரைவில் குணம் அளிக்கும். பக்குவமான முறையில் உயர்ந்த ஔஷதங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது.

## BABA'S-CURE

பாபாஸ் - க்யூர் இருமல், இளைப்பு. சுவாசகாசம் (Asthma) முதலிய ரோகங்களுக்கு இதை நெருப்பிலிட்டு புகை பிடிக்க தொந்திரவு நீங்கி, உடனே சுகம் காணலாம். இது கைதேர்ந்த முறையில் செய்யப்பட்டுள்ளது.

(இம்மருந்துகள் எல்லா மருந்துகடைகளிலும் கிடைக்கும்.)

# தமிழ் மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு

மலர் 5 | ஜனவரி 1945 | இதழ் 1


## நாகம்

(துத்த நாகம்)


டாக்டர் ஆர். தியாகராஜன், எல்.ஐ.எம்.


உருகு முகத்தில் பாம்புபோல் சீறுதலின் இப்பொருளுக்கு நாகமென்று பெயர் வந்தது. இது சீரல், பொருமல், பொங்கல், இரைச்சல், ஐம்புகை, சோரம் வாசுகி வெண்ணாகம், தாம்பிரத்தின் வேதை, வாதத்திற்கு உயிர் என்ற வேறு பெயர்களினாலும் வழங்கப்படும்.

இயற்கையில் மற்றைப் பொருள்களுடன் கலந்தே இருக்கின்றது. பிரித்தெடுத்தபின் இது வெள்ளையும் நீலமும் கலந்த நிறமாயும், பளபளப்பாயும் கட்டியாயும் இருக்கும். இதனைக் கம்பிகளாக நீட்டியும் தகடுகளாகத் தட்டியும் விடலாம். இதற்குக் கரையும் தன்மை திராவகங்களில் உண்டு. காற்றில் பட்டால் நாளடைவில் இதன்மேல் உப்புப் பூத்துவிடும். இதனுடன் செப்பு சேர்த்தாருக்கப் பித்தளையாம். இப்பொருள் அதிகமாகச் சீன தேசத்திலிருக்கும், பர்மா தேசத்திலிருக்கும், இந்தியாவிற்கு வருகின்றது. நாகத்தில் இருவகை உண்டு. அவையாவன:— 1. பெருங்கண் நாகம். 2. சிறுகண் நாகம் ஆகும். அணுக்கள் அடங்கப்பட்டது சிறுகண் நாகம்.

நாகத்தினுடைய பகைச்சரக்குகள் அண்டர், அபினி, அன்னபேதி. கல்லுப்பு, கிளிஞ்சல், சிங்கி, தங்கம், தாரா, நண்டோடு, மிளகு, வளையலுப்பு, வீரம், வெடியுப்பு, வெங்காரம், வெள்ளி, வெள்ளைப் பாஷாணம் என்றும், நட்புச் சரக்குகள் அப்பிரகம், இரும்பு, கந்தி, காந்தம், காரீயம், கௌரி, நவாச்சாரம், சிலாசத்து, சூதம், செம்பு, மயூரச் செப்பு என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இதற்குத் துவர்ப்புச் சுவையும் உஷ்ண வீரியமும் உள.

இதற்குத் துவர்ப்பி, குருதிப் பெருக்கடக்கி, உடல் தேற்றிச் செய்கைகள் உள. இதன் பொதுக்குணத்தைக் கீழ்ச் செய்யுள் உணர்த்தும்.

மேகங் கிளர்பேதி வெட்டையழ லுத்தணிக்கும்
வேகங்கி ராணி விலக்குங்காண்—போகாப்
பரியமுளைப் புண்ணைப் பயித்தியத்தைப் போக்கு
மரியதுத்த நாக மது.

(இ-ள்) துத்தநாகம் மேகம், பேதி, வெள்ளை, உட்சூடு கிரகணி, முளைப்புண், பித்தம் முதலிய நோய்களை நீக்கும் எனக் கொள்க.

சொல்லி முடியாது துத்தநா கம்பொடியாய்
வெல்லத் துரத்தும் வியாதிகளை—நல்ல
வரனுடைமை யுண்டாக்கு முண்டவரை யென்று
கிருமிமனை மண்மகிமை கேள்.

(இ-ள்) துத்தநாகம் பிணிகளை நீக்கி உடலுக்கு வன்மையை அளிக்குமென்ப.

நாகத்தின் சுத்தி முறைகள்.

உருத்திராட்ச மிழைத்தெடுத்த குழம்பு $4\frac{1}{2}$ பலத்தைப் புன்னைப் புட்பமகரந்தப் பொடியுடனே கலந்து இருக்கப்பட்ட தேன் $1\frac{1}{8}$ பலம் சேர்த்து அதில் 1 பலம் துத்தநாகப் பொடியிட்டு வெய்யிலில் வைக்கவும், இவ்விதம் ஒருமாத காலம் செய்துவர நாகம் சுத்தியாம். இங்ஙனம் சுத்திசெய்த நாகத்தினுல் செய்யப்பட்ட பற்பச் செந்தூர மருந்து உயிர் நிலையைத் தேகத்தில் வெகுகாலம் திரமாய் இருக்கப்பண்ணும். (தேரன் முறை.)

வேறு

ஒரு சட்டியில் இலுப்பை நெய்யை யூற்றி இரண்டு நவாச்சாரக் கட்டி யெடுத்து அந்த இலுப்பை நெய்யுள்ள சட்டியின் இரண்டு பக்கங்களில் பக்கத்துக்கு ஒன்றாக அந்நெய்யில் பாதிகட்டி முழுகும் படி வைத்துத் துத்தநாகத்தை இரும்புச் சட்டியிலிட்டு உலையில் வைத்து குலுக்கி உருக்கி 21 முறை அந்நெய்யில் ஊற்றவேண்டும். ஒவ்வொரு முறைக்கும் கழுவி உருக்கவேண்டும்.

வேறு

குழந்தை மூத்திரத்தில் பழச்சாறு சேர்த்துக், கற்சுண்ணம் போட்டு வைத்துக்கொண்டு, கரண்டியில் ஆட்டு நெய் சிறிது விட்டு நாகத்தை உருக்கி மேற்படி நீரில் பத்துமுறை சாய்த்து எடுக்கச் சுத்தியாம். ஒருகால் சிறுமானல் நீர்ச்சட்டி விளிம்பில் நான்கு மூலையிலும் நான்கு நவாச்சாரத் துண்டுகளை ($1\frac{1}{2}$ அங்குலம் நீளம்) நீரில் படும்படி வைக்கவும். (அ. கன்ம சூத்திரம் 150.)

சூதகம்நின்று, கருப்பத்தைப்போல் தோன்றும். மறு சூதகத் தன்றே அல்லது வேறு காலத்திலோ வயிறு உப்பி, கருநிறங்கலந்த சூதகம் வெளிப்படும். துர்க்கந்தத்துடன் கூடியிருக்கும். அப்போது தலைவலி, முதுகு, இடுப்பு குடைச்சல், வயிற்றுக் கடுப்பும் தோன்றும். தேகமும் கருத்து நிற்கும்.

பித்த பெரும்பாடு :—

ஆமென்ற வன்னத்தை யிறங்கொட் டாது
அழுகின்ற மஞ்சள்நிறம் போல ஊற்றும்
வேமென்ற யோனியிலே வேக்கா டுண்டாம்
மேனியுமோ வெளுத்துமே ரத்தம் போகும்
காமென்ற கால்கையு மழற்ற லாகும்
கருகலாய்க் கட்டிபோ லுதிரம் வீழும்
தேமென்ற சிறுகடுப்பா மங்க மெல்லாம்
சிறியதோர் பித்தத்தின் சிராவ மாமே.

கருப்புநிறக் கட்டிகள்போல் இரத்தம் உறைந்து, மஞ்சள் நிறங் கலந்த உதிரத்துடன் கலந்து சூதகம் அதிகமாக ஊற்றும். இதனால் உடல வெளுத்துப் பாண்டு ஆகும். உடம்பில் சிறு கடுப்பு உண்டாம், கால் கைகளில் எரிச்சல்தோன்றி, யோனியில் வேக்காடு உண்டாம். உணவு ஏற்காது.

கப பெரும்பாடு :—

ஆகுமே வெள்ளைநிற மாக வூற்றும்
அரியான நாற்றந்தான் மிகவுண் டாகும்
வேகுமே வுடம்பெங்கும் விபூதி பூக்கும்
வெந்தழலா யுடம்பெங்கும் எரிச்ச லாகும்
பாகுமே படபடப்பு மூச்சுண் டாகும்
பாரமாங் கோழையொடு இரும லாகும்
சேகுமே யடிக்கடிக்கு மயக்க மாகும்
சேட்டுமத்தின் சிராவமென்றே செபப லாமே.

சிறிது வெண்மைகலந்த நிறத்துடனும், மிக நாற்றத்துடனும் சூதகம் அதிகமாக வெளிப்படும். படபட என மார்பு துடிக்கும். மேல்மூச்சு உண்டாகும், உடம்பெங்கும் நெருப்புப்பட்டதுபோல் எரிச்சல் காணும். விபூதிபோல் உடம்பெங்கும் உப்புபூக்கும். கோழையொடு இருமலும், மயக்கமும் உண்டாகும்.

தொந்த பெரும்பாடு :—

செப்பவே கருகலாய்ச் சிவப்பு மாகும்
சேர்ந்ததிலே கட்டியாய்க் கறுப்பாய் வீழும்
உப்பவே வயிறதுவு முளைச்ச லாகும்
ஊசலா நாற்றமுட னொழுக்க மாகும்

நப்பவே மஞ்சள்நிற நயப்பு மாகும்
நாணியே தலைதானு நடுக்க லாகும்
துப்பவே வாய்நீரு மிகவே யூற்றும்
தொந்தமாம் பெரும்பாடு சூட்டி னோமே.

கருப்பாகவும், சிவப்பாகவும், மஞ்சளாகவும், கறுப்புக் கட்டிகள் கலந்தும் சூதகம் அதிகமாக வூற்றும். வயிற்றில் வலி யுண்டாகும், சில சமயங்களில் தீய நாற்றத்துடனும் வெளிப்படும். உமிழ்நீர் அதிகப்படும். தலை நடுக்கலும் உண்டாம்.

---

## அனுபவ முறைகள்

# ஆமைஓட்டுக் குளிகை

பசுபுலேட்டி கன்னைய-வீரராகவன்.

1. கர்ப்பூர சிலாசத்துப் பற்பம் பலம் 1—(மேனியில் புடமிட்டது)
2. பவழ பற்பம் ,, ½—(முயல் இரத்தத்தில் புடமிட்டது)
3. சுத்தி செய்த தேற்றாங் கொட்டை ,, ½
4. அதிமதுரப் பால் ,, 1
5. கருவேலம் பிசின் ,, ½—(பொரித்தது)
6. வாதுமைப் பிசின் ,, 1
7. சிந்தில் சர்க்கரை ,, 1
8. மதத்துக்கரி ,, ½—(கருவேலங் கொழுந்தைக் கருக்கி இத்துடன் அபின் சமன் கூட்டிக் கொஞ்சம் தண்ணீர்விட்டுக் கரைத்து மறுபடியும் எரித்துச் சாம்பலாக்கவும்.

செய்முறை:—ஒரு பெரிய வெள்ளை ஆமையை இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு இரண்டு படி நீர்விட்டு ¼ படியாகச் சுண்டக் காய்ச்சி வடித்து இக்கஷாயத்தால் முற்கூறிய சரக்குகளை நன்கரைத்துக் கடலைப் பிரமாணம் உருட்டவும்.

பிணிநீக்கம்:—எந்த நேரமும் வாயிலடக்கிக்கொண்டு எச்சிலை விழுங்கிவர, இருமல், க்ஷயம், இரத்தகாசம் முதலியன நீங்கும்.

பத்தியம்: —புளி, புகை, நீக்கவும். சுகமான தூக்கம் வரும்.

# மருத்துவர்களின் பொறுப்பு

கோ. துரைராசன்.

நோய்களைத் தீர்ப்பது மருத்துவர்களின் பொறுப்பு என யாவரும் ஒப்புக்கொள்வர். நோயுற்ற பிறகு பல பரிகாரங்களைச் செய்து உடலை எவ்வளவுதான் தேற்றினபோதும் நோய் நீங்கி முன்னிருந்த இயற்கை நிலையை உடல் அடைவது கடினமாகும். பழுதுபட்ட உடல் அச்சின்னங்களை ஏற்றே நிற்கும். ஒரு முறை நோய் வாய்ப்படினும், பலம் குன்றும். பல நோய்களும் தொடர ஏதுவாகும். ஆகையால் நோய்க்குச் சற்றும் இடம் கொடுக்கலாகாது. "நோய்க்கு இடங்கொடேல்" என்ற மூதுரையும் இதுகண்டே வெளிப்பட்டதென்பதும் காண்க. பலமுறை நோயால் வருந்துவானாயின் அவன் எங்ஙனம் இன்பமாக வாழக் கூடும்? பல செல்வங்களிருப்பினும், அவனுக்கு எதற்கு? சுகவாழ்வு கிடைப்பது கடினம். ஆகையால் "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமாகும்" அதையே யாவரும் சிறப்பாக விரும்பவேண்டும்.

வெள்ளம் வரும் முன்பே அணைபோட்டுத் தடுப்பது அறிவாகும். அதுபோல நோய் வரும்முன்னே அதைத் தடுப்பதே அறிவுடைமையாகும். ஆகையால் நோய்களைத் தீர்ப்பதுடன் அவைகளைத் தோற்றாது செய்வதும் மருத்துவர்களின் சிறந்த கடைமையாகும்.

பல யுகங்களுக்கு முன்பே இப்பொறுப்பை நம் முன்னோர்கள் ஏற்று நோயில்லா நெறிகளை (நோய் அணுகாவிதிகளை) மருத்துநூல்களிலன்றிச் சமய நூல்களிலும், நல்வழி, வாக்குண்டாம், திருக்குறள் என்பவற்றிலும் இவைபோன்ற பல நீதி நூல்களிலும் எழுதி, யாவரும் உணருமாறு வைத்ததுடன், பழக்கத்திலும் கொண்டுவந்தனர். "நோயில்லா நெறி விட்டோரருமையப்பா" என்றும் கூறினர். அவ்வழிகள் பரம்பரையாக அதிக பழக்கத்தில் வந்துள்ளதால் அவைகளின் பலவற்றின் ஆழ்ந்த கருத்துகளை நாம் மறக்கலாயிற்று. பிறகு அப்பழக்கங்களைக் கொஞ்சங் கொஞ்சமாகக் கைவிடத் தொடங்கியுள்ளோமாயினும், இன்றும் அவைகளில் பல, நம்மை விட்டு அகலவில்லை.

நோய்கள் வராது தடுப்பதுடன், வாழ்நாளை வளரச் செய்யும் பல கற்ப முறைகளையும் சித்தர்கள் இயற்றியுள்ளார்கள். ஆயுளைப் பற்றிக் கூறும் நூல் என்று பொருள் படும்படி, மருத்துவ நூலை "ஆயுள் மறை" என்று கூறினர். ஆகையால் நோய் நீக்கத்துக்கு வேண்டிய பரிகாரம் முதலியவைகளையன்றி, நோய் வராது பாதுகாத்துக்கொள்ள நோயில்லா நெறிகளையும், ஆயுளை வளர்க்கக் கற்ப முறைகளையும் மருத்துவர்கள் உணர வேண்டுமென்பது தெளிவாகின்றது.

இவற்றைச் சில ஆண்டுகளுக்கு முன்புதான் மேனாட்டார்கள் நன்கு உணர்ந்து நோயணுகா வைத்திய முறைகளுக்கு (Preventive Medicine and Hygiene) அதிக ஆதரவுகள் அளித்து மருத்துவ மாணவர்களுக்குப் போதித்தும், ஜில்லாக்கள் தோறும் நோய்கள் வராது தடுக்கும் பொருட்டுச் சில உத்தியோகஸ்தர்களை (Health Officers, Visitors etc.) ஏற்படுத்தியு முள்ளார்கள். அவர்களே அத்தொழிலைச் செய்யட்டும் என்று விட்டுச் சித்த மருத்துவர்களாகிய நாம் வாளாவிராது, நம் முன்னோர்களின் கருத்துக் கிணங்கி நோய் தோற்றாது செய்தல், பிணிநீக்கம், கர்ப்ப சிகிச்சை ஆகிய முத்தொழில்களையும் செய்தல் வேண்டும்.

இம் முத்தொழில்களிலும் முதலில் செய்ய வேண்டியது, ஏதுவெனில் நோயில்லா நெறிகளையும், பழக்கங்களையும் இயன்ற வகையில் காரணங்களுடன் மக்களுக்குக் கூறுவதாம். இதன் பொருட்டுக் குறைந்தது வாரத்திற்கு ஒரு முறையாவது, கிராமங்கள்தோறும், மக்களை ஓரிடத்தில் திரளச்செய்து சொற்பொழிவாற்றி அந்நெறிகளை அநுசரிக்கும்படிச் செய்யவேண்டும். இப்படி அநுசரித்தால் நம்மிடையிலுள்ள கொடிய வறுமைப் பிணியும் ஒருவாறு ஒழியுமெனக் கூறலாம். ஆகையால் சித்தமாணவர்களே! மருத்துவர்களே! சுகநெறி உணர்ந்தவர்களே! சற்றும் தயங்காது, நோயில்லா நெறிகளை மக்களிடை பரப்புங்கள்!!!

---

இந்திய மருத்துவக் கலாசாலையின் பிரின்சிபால்

டாக்டர் பி. வி. கிருஷ்ண ராவ்,

பி.ஏ., எம்.பி.பி.எஸ், எப்.ஐ.எம்., அவர்கள்

## மறைவு

7—10—'44 சனிக்கிழமை காலை $7\frac{1}{2}$-மணிக்கு நம் இந்திய மருத்துவ பாடசாலையைத் திறமையுடன் நடாத்திய பிரின்சிபால், டாக்டர் கிருஷ்ண ராவ் அவர்கள் விண்ணுலகிற்கு விருந்தாயினர். அவர்தம் பிரிவு மாணவர் மனத்தில் என்றும் அகலாது. அவர்தம் ஆன்மா சாந்தி பெறுவதாக! எம் அநுதாபம் அவர்தம் குடும்பத்திற்கு உரியதாகுக.

பிர்.

---

## நாக பற்பம்.

ஒரு பலம் சுத்தித்த நாகம் பொடித்துக் கீழ்ப்பட்டியில் குறிப்பிட்ட சாறுகளைக்கொண்டு முறைப்படி அரைத்து, வில்லை செய்து உலர்த்திப் புடமிட்டெடுக்கப் பற்பமாம்.

| சாற்றின் பெயர் | | அளவு பலம் | அரைப்பு நாள் | உலர்த்தும் வில்லை | நாள் கவசம் | வரட்டி புடம் |
|---|---|---|---|---|---|---|
| வெண்சாலி நெல் கதிர் பசுங்காய்ச் சாறு | — | 5 | 5 | 4 | 1 | 36 |
| நெல்லியிலைச் சாறு | — | 5 | 5 | 4 | 1 | 36 |
| கருப்பஞ் சாறு | — | 5 | 5 | 4 | 1 | 30 |
| குறுஆல் வேர்ப் பட்டைச் சாறு | — | 5 | 5 | 4 | 1 | 30 |
| வெள்ளல்லிச் சமூலச் சாறு | — | 5 | 5 | 4 | 1 | 30 |
| காந்தள் சமூலச் சாறு | — | 5 | 5 | 4 | 1 | 30 |
| தண்ணீர்விட்டான் கிழங்குச் சாறு | — | 5 | 5 | 4 | 1 | 30 |

மேற்படியாகச் செய்து முடித்த துத்தநாக பற்பமானது நோயினால் வருகின்ற மெய் இடையூறுகளை யெல்லாம் மாற்றித் தேகத்தைச் செம்மைபடுத்திக் காப்பாற்றும். அஃது எப்படியென்றால் உலோகத்தினால் செய்த பாண்டங்கள் மெலிந்து தேய்ந்து ஓட்டையாய் விட்டால் அப்போது துத்தநாகத்தைப் பற்றுகவைத்துப் பற்றவைத்தால் எப்படி ஓட்டையை மாற்றிச் செம்மை படுத்துமோ அப்படியே மெலிந்துபோன சரீரத்தைக் காப்பாற்றிச் செம்மைபடுத்தி நன்மையைத்தரும். இதனைக் கீழ்ச் செய்யுள் உணர்த்தும்.

"எய்த்திளைத்திடு மியாக்கை யியங்குபு திரிநகம் போற்
சொத்தமாக் குதற்குச் சுண்ணத் துத்தநா கத்தின் வேறில்
வித்தகக் காட்சிக் கஞ்சா வெண்கலம் பித்தளைக்கேசுய
வைத்தனரஃ தேலுண்மை மானிடர்க் கிலக்கி தாமே"

மேற்படி பற்பத்தின் அளவு யாதெனில் அவரைக் கொட்டையில் ஆறில் ஒரு கூறு உத்தமம், இரண்டு கூறு மத்திமம், மூன்று கூறு அதமம், நான்கு கூறு அதமாதமம், ஐந்து கூறு ஒரு புடைத் துணிவு, முழுக்கூறு முழுமைத் துணிவுமாம்.

நிற்க, மருந்து நன்றாய்ச்செய்து முடித்திருந்தபோதிலும் அளவுப் பிரயோகத்தில் பிசகு வந்தால் அதனால் மிகுந்த தீங்கு நேரிடும். அஃது எப்படியென்றால்: அதிக இலேசாக இருக்கப்பட்ட மயிலிறகை மிதமில்லாமல் ஒரு வண்டியில் ஏற்றினால் அவ்வண்டியின் அச்சாணி

ஒடிந்து முதலுக்கே நஷ்டம் உண்டாவதுபோல் நூல்கள் குறிப்பிட்ட அளவைகளை விட்டு அதிக அளவிலே மருந்தைப் பிரயோகித்தால் அதைப் பொசித்த பிணியாளனுடைய உடல் மேற்படிச் சகடத்தைப் போல் கெட்டு இன்னலை அடையும் என்பதை வள்ளுவர் குறளில்,

"பீலிபெய் சகடு மச்சிறும் அப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்" என்றும்

அகத்தியர் தாம் எழுதிய இருபத்தோராயிரத்தில்,

"மொழிந்ததுகே ளப்பனே யவிழ்த நன்மை
முறையான போதுமுன்னே யளவை வேணு
மழிந்துவிடு மில்லாட்டாலது வே கால
னணுகுமடா புலத்தியனே யறிந்து செய்வா
யிழிந்தபல னனமயி லிறகென் றூனு
மேற்றினான் மிகைச் சகட மிறுதிகாட்டு
மழிந்த முது மறையாயுள் வேதமான
வாகடத்தி னிலைமையிது மதித்துப்பாரே." என்றும்

சட்ட முனிவர் வாகடம் ஆயிரத்தில்,

"அனுமான மில்லையடா வவிழ்த நன்மை
யாயினுமே லதுமித வளவை யாகு
முனையான வதுதவறி லுண்ட பேர்க்கு
மோசமது தப்பாது முடிக்கு மப்பா
பினுமதனுக் குவமானம் வேறொன் றில்லை
பீலிபெய்த சாகாடு பெய ரொன்றுமே
முனிவருஞ் சித்தர்களு மிதுவே சொன்னார்
மூவகையா கிய வினைக்கு மூதலிதாமே."

என்றும் கூறியிருத்தலால் அறிக.

நாகபர்பத்தைப் பொசிக்குப்பொழுது நெய்தல் நிலவாசத்தை நீக்கி மருதநிலத்தில் வசிக்க வேண்டுமென்றும், ஆனி, பங்குனி, மார்கழி ஆகிய மூன்று மாதங்களையும் நீக்கி மற்றைய மாதங்களில் அருந்த வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

(தொடரும்)

---

சித்த மருத்துவத்தின் சீர்பெற்ற கட்டுரைகள்
முற்றும் பலதிரட்டி மூதுலகில்—மொத்தகமாய்த்
தந்துதவு கின்ற தமிழ்மருத்து வப்பொழிலே
இந்துலகில் வாழ்வாய் இனிது.

(க. ரா. கி.)

# இந்திய மருத்துவ முறைகளின் வரலாறு

சீ. வை. சிவசுப்ரமணியன், பி.ஏ.

நமது நாட்டில் தொன்றுதொட்டு கையாளப்பட்டு வரும் மருத்துவ முறைகள் மூன்று:—அவை ஆயுர்வேதம், சித்தமுறை, யூனானி முறை என்பனவாம். இவற்றுடன் மேல்நாட்டு முறையும் தற்காலத்தில் நகர மக்களிற் பெரும் பகுதியினரால் பின்பற்றப்பட்டு வருகிறது. மேனாட்டு மருத்துவமுறை வளர்ச்சி பற்றிய வரலாற்று நூல்கள் மிகப்பல. நம் நாட்டுப் பண்டைய மருத்துவ முறைகளின் வளர்ச்சி பற்றிய நூல்கள் இஞ்ஞான்று பெரிதும் அருகிக் காணப்படுகின்றன. நம் நாட்டு முறைகளைப்பற்றிய அறிவை நாம் பெறுதற்குரிய ஆராய்ச்சி நூல்கள் இதுவரை வெளிவராதிருப்பது பெருங்குறையேயாகும். நம் நாட்டு மக்களை அந்நெறியிலுய்த்தற்பொருட்டு, இம்மூன்று முறைகளும் இந்தியாவில் நம்முன்னோரால் எங்ஙனம் வளர்க்கப் பெற்று வந்தது என்பதுபற்றி எனது கருத்துக்களை இப்பொழிலின் வாயிலாக வெளியிடுகின்றனன்.

## ஆயுர்வேத முறை.

கர்ண பரம்பரை வரலாற்றுப்படி, ஆயுர்வேத மருத்துவமுறை நம் நாட்டு மக்களுக்கு இருவேறு பகுதிகளாக இறைவனால் அளிக்கப்பட்டது என அறிகிறோம். முதலாவதாக, அகப்புற நோய்களை மருந்துகளைக்கொண்டு குணப்படுத்தும் பகுதி இந்திரனால் பாரத்வாசனுக்கு உபதேசிக்கப்பட்டுப் பின்பு அவனால் ஆத்திரேய முனிவனுக்கு உணர்த்தப்பட்டதென்ப. இரண்டாவதாக, அறுவை நூற்பகுதி இந்திரனால் தன்வந்தரிக்கு உபதேசிக்கப்பட்டுப், பின்பு அவரால் சுசுருதருக்கு அறிவிக்கப்பட்டது என்ப. சுசுருதரது காலத்திற்குமுன், ஆயுர்வேதம் தோன்றியதைப்பற்றிப் பல கட்டுக் கதைகள் உலாவிவந்தன; அவருடைய காலத்திலிருந்துதான் இந்திய மருத்துவ முறை சரித்திர வரையறை பெற்றது. அவருக்கு முற்பட்ட மக்கள் தங்களது வியாதிகளைத் தெய்வமே அவதாரமாக வந்து மந்திர வலியால் தீர்த்து வந்தது என்ற மூட நம்பிக்கையைக் கொண்டிருந்தனர்.

ஆத்ரேயனும் சுசுருதனும்:— இவர்களைப்பற்றிய வரலாறுகள் புத்த ஜாதகக் கதைகளில் காணப்படுகின்றன. கௌதம புத்தர் காலத்தில் காசியிலும், தக்ஷசிலத்திலும் இரண்டு பெரிய கல்லூரிகள் இருந்தன. அங்கு கற்பிக்கப்பட்ட கலைகளுள் மருத்துவக்கலையும் ஒன்று. புத்தரது அவதாரத்திற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னமே

ஆத்ரேயன் என்ற மருத்துவப் பேராசிரியர் (Professor of Medicine) தக்ஷசிலைக் கல்லூரியில் மாணாக்கர்களுக்கு மருத்துவக் கலையைப் பயிற்றுவித்துக் கொண்டிருந்ததாகவும், காசிக்கல்லூரியில் சுசுருதர் என்பாவர் அறுவை நூற்பேராசிரியராய் (Professor of Surgery) அமர்ந்திருந்ததாகவும் கூறப்படுகிறது. மனித உடலில் உள்ள எலும்புகளின் எண்ணிக்கையைப்பற்றிச் சுசுருதர் கூறுமிடத்து அதுபற்றிய ஆத்மேயரது கருத்துக்களையும் எடுத்துக் கூறுவதால் சுசுருதர் ஆத்ரேயருக்குப் பிற்பட்டவராதல் வேண்டுமென்பது வலியுறுகின்றது.

மற்றும் "சதபத பிராமணம்" என்ற வேதநூற் பகுதியில் சுசுருதரின் கொள்கைகள் கூறப்படுவதாலும் அந்நூல் கி. மு. 6-ம் நூற்றாண்டில் தோன்றிய தொன்றாகலாலும் சுசுருதர், ஆத்ரேயர் காலத்தவராகவோ அன்றி அவரது மாணாக்கராகிய அக்கினிவேசர் காலத்தவராகவோ இருத்தல் வேண்டும் என்பது பெறப்படுகின்றது. புத்தர் காலத்திலிருந்த ஜீவகன் என்பான் தக்ஷசிலைப்பல்கலைக் கழகத்தில் ஆத்ரேயனின் மாணவனாக மருத்துவக்கலை பயின்றான் எனவும் அறிகிறோம். மற்றும், அதர்வவேதத்தில், மனிதனது சிருஷ்டியைப்பற்றிக் கூறும் பகுதியில், எலும்புகளின் எண்ணிக்கை ஆத்ரேயனது முறைப்படி கணக்கிடப்படுகின்றது. அதர்வ வேதத்தின் காலம் இன்னதென அறுதியிட்டுக்கூற இயலாதெனினும், அது கி. மு 1000-க்கு முன்னரே தோன்றியிருத்தல் வேண்டுமென்பது அறிஞர் முடிபு. காசி, தக்ஷசிலைப்பல்கலைக் கழகங்கள் கி. மு. ஆறாம் நூற்றாண்டில் சிறப்புற்றோங்கி இருந்தமையாலும், மேற்கூறியவற்றாலும் சுசுருதர் கி. மு. 600-க்கு முன்னர்தான் இருந்திருக்க வேண்டுமென்பது பெறப்படுகின்றது.

இவர்களுக்குப்பின் தோன்றிய ஆயுர்வேத மருத்துவக் கலைஞர் சரகர் என்பாராவர். இவர் கனிஷ்கன் என்ற குஷான்வம்சத்து பௌத்தமன்னனது அரசாங்க மருத்துவராக விளங்கினரெனப் பௌத்த நூல்கள் கூறுகின்றன. கனிஷ்கனது காலம் கி. பி. முதல் நூற்றாண்டெனச் சிலராலும் கி. பி. 3-ம் நூற்றாண்டெனச் சிலராலும் கூறப்படுகிறது. எனினும் அவன் கி. பி. 120 முதல் 160 வரை அரசாண்டான் என்பது பெரும்பாலோர் முடிவு. சுசுருதரும் கனிஷ்கனது ராஜமருத்துவரா இருந்தாரெனச் சிலர் கூறுகின்றனர். கனிஷ்கன் காலத்திலேயே நாகார்ச்சுனன் என்றவோர் மருத்துவ அறிஞன், சுசுருதனது நூலையும், அக்கினிவேசனது நூலையும் சிறிது திருத்தி வெளியிட்டான்.

முதலாம் வாக்பட்டர்:—இவரது நூல்களில் சுசுருதரும் சரகரும் கூறப்படுகின்றமையின் இவர் அவ்விருவருக்கும் காலத்தாற் பிற்பட்டவர் என்பது போதரும். கி. பி. 675 முதல் 685 வரை

நாலந்தா பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்ற பௌத்த யாத்ரீகன் ஒருவன், "எட்டு பகுதிகளாக இருந்த மருத்துவக் கலையை வாக்பட்டன் என்பான் ஒருங்குதிரட்டி ஒரே பகுதியாக வெளியிட்டான்" என்று கூறுவதனால் வாக்பட்டர் கி. பி. 7-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்திருத்தல்வேண்டும். சுசுருதரது நூலுக்கும் முதலாம் வாக்பட்டர் நூலுக்குமுள்ள வித்தியாசம் என்னையெனின், சுசுருதர் மனித எலும்புக்கூட்டின் அமைப்பு, எலும்புகளின் வகை, தொகை முதலியவற்றைத் தானே கண்டு உணர்ந்து கூறுகிறார். வாக்பட்டரது கூற்றுக்களை ஆராயின் அவை அனுபவ வாயிலாகக் கூறப்படும் உண்மைகளாகத் தோன்றவில்லை. எனவே சுசுருதருக்கும் வாக்பட்டருக்கும் இடைப்பட்ட காலத்திலே மனித உடலுறுப்புக்கலை (Anatomy) தன் உன்னத நிலையினின்றும் மாறி அனுபவத்தாலன்றி அனுமானத்தால் சுருதிவாயிலாக (Theoritical knowledge) உணர்த்தப்படும் நிலையைப்பெற்றது. மற்றும் வாக்பட்டரது நூலில் இயற்கைவரம்புக்கு முரணான சில கருத்துக்கள் கூறப்படுகின்றன. வாக்பட்டர் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்தவராவர். அவருக்குப் பின்வந்த வாக்பட்டர் 2 காலத்தில் அவரது நூலில் மனிதனது எலும்புக் கூட்டைப்பற்றிய சொல்லாட்சியே காணப்படவில்லை. மனித உடல் 360 எலும்புகளையுடையது என மட்டும் கூறப்படுகின்றது. சுசுருதரது நூலில் கூறப்பட்டுள்ள கண்ணோய் வகைகளும் அவற்றிற்குரிய சிகிச்சை முறைகளும் அவருக்குப் பின்வந்த வாக்பட்டரது நூல்களில் ஒரு சில விடங்களில் குறைத்துக் கூறப்படுகின்றன. அவருக்குப் பிற்பட்ட மாதவர், திரிதபலர், இரண்டாம் வாக்பட்டர் என்னும் மூவரும் தங்கள் நூல்களில் கண்ணோய் பற்றி யாண்டும் ஒருசிறிதும் கூறினார்களில்லை. இம்மூவரும் கி. பி. 600-க்கும் 800-க்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தனர் என்ப. இம்மூவரும் முதலாம் வாக்பட்டருக்கு காலத்தாற் பிற்பட்டவர்களே. மாதவர் தனது நூலிலே முதலாம் வாக்பட்டரது பெயரை எடுத்தாளுகிறார்; திரிதபலரும் அவரது கருத்துக்களைத் தம் நூலுள் அமைத்துள்ளார். வாக்பட்டரது கருத்துப்படி கண்ணோய்களின் வகை 96, திரிதபலரும் அதையே அடிப்படையாகக்கொண்டு கூறுகிறார். முதலாம் வாக்பட்டர் எழுதிய நூல் "அஷ்டாங்க சங்கிரகம்" என்பது. இரண்டாம் வாக்பட்டர் தான் எழுதிய "அஷ்டாங்க ஹிருதய சங்கிதை" என்ற நூல் அஷ்டாங்க சங்கிரகத்தின் சுருக்கமேயாகுமெனக் கூறுகிறார். கி. பி. 1060-ல் இருந்த சக்கரபாணி தத்தர் என்ற மருத்துவக்கலையறிஞர் தாமியற்றிய சரக சங்கிதையுரையில் இரண்டாம் வாக்பட்டரது நூற்பகுதிகளை மேற் கூறியவற்றால் மாதவர், திரிதபலர் இரண்டாம் வாக்பட்டர் ஆகிய மூவரும் கி. பி. 600-க்கும் 1000-க்கும் இடைப்பட்ட காலத்தில் இருந்திருத்தல் வேண்டுமென்பது பெறப்படுகின்றது. 2-ம் வாக்பட்டனது

நூலுக்கு உரையெழுதிய அருணதத்தன் என்பான், திரிதபலனது சரக சங்கிதையே 2-ம் வாக்படடனது நூலுக்கு முதனூலாய் அமைந்தது எனக் கூறுகிறான். அரேபிய நூற்சான்றுகளால் மாதவர் கி. பி. 7 அல்லது 8-ம் நூற்றாண்டிலிருந்தவரெனவும், திபேத்திய சான்றுகளால் இரண்டாம் வாக்பட்டர் கி. பி. 8 அல்லது 9-ம் நூற்றாண்டிலிருந்தவரெனவும் அறியக் கிடக்கின்றது. திரிதபலன் இவ்விருவருக்கும் இடைக்காலத்தே இருந்தவன்.

உரையாசிரியர்கள்:—(1) சக்கரபாணிதத்தர் கி. பி. 1060-ல் "சரக தாத்பர்ய பீகம்" அல்லது "ஆயுர்வேத தீபிகை" என்ற உரை நூல் வகுத்தார். (2) தல்ஹணர் என்பார் சுசுருதரது நூலுக்கு "நிபந்த சங்கிரஹம்" என்ற உரை எழுதினார். இவரது நூலில் சக்கரபாணிதத்தரது சொல்லாட்சி காணப்படுவதால் தல்ஹணர் சக்கரபாணிக்கு பிற்பட்டவர் என்பது போதரும். ஹேமாத்திரியும், வாசஸ்பதியும் தல்ஹணரது பெயரைத் தம் நூல்களுள் கூறுவதாலும், அவ்விருவரும் கி. பி. 1260-ல் இருந்தவர்களாதலாலும், தல்ஹணர் இவ்விருவருக்கும் முற்பட்டவர் என்பது பெறப்படும். (3) இரண்டாம் வாக்பட்டர் நூலுக்கு அருணதத்தர் எழுதிய 'சர்வாங்க சுந்தரி என்ற உரை." (4) மாதவரது நிதான நூலுக்கு (Pathology) விஜய ரக்ஷிதனும், ஸ்ரீகண்ட தத்தனும் சேர்ந்து எழுதிய "மதுகோசம்" என்ற உரை. ( ) மாதவ நிதானத்திற்கே வாசஸ்பதி எழுதிய "ஆதங்க தர்ப்பணம் என்ற உரை. வாசஸ்பதி தன் நூலின் முகவுரை 5-ம் செய்யுளில் பிரமோதன் என்னும் தன் தந்தை மகமது கோரியின் அரசவையில் மருத்துவனாக இருந்ததாகக் கூறுகிறான். மகமது கோரியின் ஆட்சிக்காலம் கி. பி 1193 முதல் 1260 வரை. இதுவரை செய்துள்ள ஆராய்ச்சி முடிவுப்படி அருணதத்தன் காலம் கி. பி. 1220 எனவும், விஜயரக்ஷிதன் காலம் கி. பி 1240 எனவும் கூறப்படுகின்றது. கி. பி. 1000-ல் பாஸ்கரபட்டன் என்பான் "சரீரபத்மினி" என்ற நூலும் கி. பி 16-ம் நூற்றாண்டில் பாவமிஸிரன் என்பான் "பவப்பிரகாசம்" என்ற நூலும் எழுதினர். பவப்பிரகாஸம் முதல் மருத்துவ நூல்களின் கருத்துக்களைத் திரட்டிக் கூறும் ஒருசார்பு நூலாகலின் அதை ஒரு முதனூலாகக் கூற முடியாது.

கி. பி. 648-ல் அரசாண்ட சீனச்சக்கரவர்த்தி இந்தியாவில் சுசுருதன் என்ற மருத்துவப் பேரறிஞர் 200 ஆண்டுகள் உயிருடனிருப்பதாகக் கேள்வியற்று அவரிடமிருந்து காயகற்ப முறைகளை அறிந்துவருமாறு தன் தூதர்களை அனுப்பினனென அறிகிறோம். அதனால் சுசுருதரது காலம் கி. பி. 7-ம் நூற்றாண்டென்பது வலியுறுகின்றது. Professor வில்ஸன் என்பார் சரகரும் சுசுருதரும் கி. பி. 9-ம் நூற்றாண்டிலிருந்தவர்கள் எனக் கூறுகிறார்.

இந்தியாவிலும் இலங்கையிலும் பௌத்த மதம் தலை சிறந்து விளங்கிய காலத்தில், மருத்துவக்கலை பலராலும் பயிலப்பட்டு வந்தது. நாலந்தா பல்கலைக் கழகம் முதல் பௌத்தப் பள்ளிகளில் பலர் இக்கலையைப் பயின்றனர் என இத்ஸிங், (I'Tsing) பாஹியான் Fa-hien) என்ற சீனயாத்திரீகர்கள் கூறுகின்றனர். கி. பி. 1200 வரை பௌத்தப் பள்ளிகளில் மருத்துவமும், தருக்கமும் மிகச் சிறந்த முறையில் கற்பிக்கப்பட்டு வந்தன.

கி. பி. 13-ம் நூற்றாண்டிலிருந்து இந்த ஆயுர்வேத மருத்துவ நூல்கள் அரேபியர்களாலும், பாரசீகர்களாலும் தத்தம் மொழிகளில், மொழிபெயர்க்கப்பட்டன.

பாரசீகர்களால் எழுதப்பட்ட சில நூல்களாவன:—(1) முக் ஜான்-அல்-உத்வீ. (Store house of Medicine) 1769-ம் ஆண்டு எழுதப்பட்டது. (2) ஷாஜெஹான் சக்ரவர்த்தியின் அரண்மனை மருத்துவனால் எழுதப்பட்ட உல்பாஜ உத்வீ. (3) காஸ்பியன் கடற் கரையிலுள்ளதோர் கிராமத்தில் வசித்த மீர் மஹமது மூமீன் என்பான் 1669-ம் ஆண்டில் எழுதிய டூப்ட்-உல்-மூமீனீன் முதலியன.

இபின் பீடார் (Ibin Beitar) என்ற அரேபியன் முதன் முதல் இந்திய மருத்துவத்தைப்பற்றித் தன் மொழியில் "ஜமா இபின் பீட்டார்" என்ற நூலை எழுதினான்.

பிற்காலத்தில் ஐரோப்பியர் இந்தியாவில் குடியேறிய பின் சரகர், சுசுருதர் முதலியோரது நூல்கள் ஐரோப்பிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு மேல் நாட்டினரால் பொன்னேபோல் போற்றப் பெற்றுவருகின்றன. சுசுருத சங்கிதையை இந்திய கவர்மெண்டார் முதன் முதல் அச்சிட ஆரம்பித்து முற்றுப் பெறாத நிலையில் கல் கத்தா ஏஷியாடிக் சொஸைடியாரால் முற்றுவிக்கப்பெற்று லார்டு ஆக்லண்டு கவர்னர் ஜெனரலாக ஆட்சி செய்த காலத்தில் (1836 to 1841) இந்நூலைப் பல நாடுகளிலும் விற்பனை செய்வதற்குத் தக்க முயற்சி செய்யப்பட்டது.

இனி அடுத்து தமிழ் நாட்டிலே தொன்று தொட்டுப் பயின்று வரும் சித்தர் முறையின் வரலாற்றை ஒரு சிறிது ஆராய்வோம்.

(தொடரும்)

# அனுபவ முறைகள்

(க. ராதாகிருஷ்ணன், எ.பி.)

## பீநசத் தைலம்

குங்குமப்பூ, ஜாதிக்காய், நாட்டுச் சர்க்கரை வகைக்கு விராகனெடை 1, ஆவின் பால் படி $\frac{1}{4}$, ஆவின் நெய் படி $\frac{1}{4}$, முதலிய குங்குமப்பூவையும், ஜாதிக்காய்த் தூளையும் சிறிது பசுவின் பால் விட்டரைத்து மிகுதியுள்ள பாலில் கலக்கி, அதனுடன் நாட்டுச் சர்க்கரையும், ஆவின் நெய்யும் கூட்டி அடுப்பிலேற்றிச் சிறுதீயாக எரித்து பதமுறக் காய்ச்சி வடித்து பத்திரப்படுத்துக.

இதைத் தனியாகவாவது அல்லது இதனுடன் சமன் வாதுமை நெய் கூட்டியாவது, வேளைக்கு 4–5 துளிவீதம் நாசித் துவாரங்களில் விட்டுக்கொண்டுவர 10–15 நாளில் எத்தகைய பீநசமும் குணமாகும்.

## மண்டூரக் காடி

மண்டூரம் பலம் 10, கடுக்காய்த்தோல் பலம் 10, பனைவெல்லம் பலம் 10, கரிசலாங்கண்ணிச் சாறு ஆழாக்கு, தென்னங்கள் படி $1\frac{1}{2}$, மண்டூரத்தையும் கடுக்காய்த் தோலையும் இடித்துச் சூரணித்து மற்றவைகளுடன் கூட்டிக் கலந்து ஓர் பீங்கான் ஜாடியில் போட்டு வாய் மூடி வைத்து 40-நாள் சென்ற பின் வடிகட்டி எடுத்து வைத்துக்கொண்டு வேளைக்கு 2–3 அவுன்ஸ் வீதம் தினம் 2 வேளை, 10-நாள் கொடுக்க மகோதரம், பாண்டு, சோபை, காமாலை முதலியன தீரும்.

## இஞ்சி சர்பத்

சுண்ணாம்பு நீக்கிய இஞ்சிச் சாறு படி $\frac{1}{4}$, புதினாச் சாறு படி $\frac{1}{8}$, கொத்துமல்லிக் கீரைச்சாறு படி $\frac{1}{8}$, எலுமிச்சம்பழச் சாறு படி $\frac{1}{8}$, கடலைக்காடி அல்லது மால்ட்டட் வினிகர் படி $\frac{1}{4}$.

இவைகளை எல்லாம் ஒருமிக்கக் கலந்து ஒரு பாண்டத்தில் விட்டு 20 பலம் நாட்டுச் சர்க்கரையைப் போட்டுக் கரைத்து சர்பத் பதமாகக் காய்ச்சி வடித்து கொள்ளவும்.

இதில் வேளைக்கு $\frac{1}{4}$–$\frac{1}{2}$ அவுன்ஸ் வீதம் தினம் 2 வேளை சிறிது நீருடன் கலந்து சாப்பிட்டு வர, புளித்தேப்பம், பசியின்மை, வாந்தி, ஓக்காலம், மார்பு எரிச்சல், பித்த மயக்கம், மந்தம், அஜீரணம் முதலியவை குணமாகும்.